உ

குகசகாயம். 12829(876)

அழகுமுத்துப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

ஸ்ரீ மெய்கண்ட

# வேலாயுத சதகம்.

# திருப்புகழ்.

இவை

நாகை "நீலலோசனிப்" பத்திராதிபரும்,

ஐஸ்கூல தமிழ்ப்பண்டிதருமாகிய

**ஸ்ரீ. சதாசிவம்பிள்ளையவர்களால்**

பரிசோதிக்கப்பெற்று

நாகை ஸ்ரீ மெய்கண்ட குமாரகோவில் தர்மகர்த்தா

**ஸ்ரீ பா. கா. காத்தப்பெருமாள் பிள்ளை**

அவர்களின் பொருளுதவிகொண்டு

நாகை "நீலலோசனி" மானேஜர்

**T. B. ரெங்கசாமிப் பிள்ளையால்**

தஞ்சை:

"பூரணச்சந்திரோதய" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

முதற்பதிப்பு காபி ௧000.

இதன்விலை அணா ௪.] [தபால் சார்ஜ் பை. ௬

சார்வரி-௵ ஆவணி௴

Copy Right Registered.

GF
O-151, May
d.x.

துணைசகாயம்.

# முகவுரை

அருணையம்பதியி லவதரித்த ஸ்ரீ அருணகிரிநா தரருளிச்செய்த திருப்புகழ்த்தோத்திரங்கள் குமா ரக்கடவுளுக்கு எவ்வளவு இனிய தோத்திரங்களாயி ருக்கின்றனவோ, அவ்வாறே இவ்வழகுமுத்துப்புல வர் சொல்லிய இந்தத் திறப்புகழ் முதலிய நூல்களி லுள்ள தோத்திரங்களும் அக்கடவுளுக்கு இனியன வாயிருக்குமென்பது அவற்றைப் படிக்கும் நல் லோர் பலருக்கும் இனிது விளங்கும். புலவரு டைய திருப்பாடல்கள் அதிமதுரமும் அற்புதமு மாயிருப்பதோடு பொருளமைதியிலும் மிகச்சிறந்தன வாயிருக்கின்றன. புலவர்பெருமான் பாடியிருந்த பிரபந்தங்களில் முதலில் நாம் நீண்ட காலமாய்க் கேள்வியுற்றது திறப்புகழொன்றுமே. இந்நகரிலு ள்ள முதியோரிரண்டொருவர் இத் திறப்புகழில் இரண்டொரு பாடல்களை அரைகுறையாய்ச் சொல் லக் கேட்கவே, மதுரம் பழுத்துத் தேன் துளிக்கும் வளப்பமுடைய செய்பாகமாயிருக்கும் அப்பாடல் கள் அதை யச்சியற்றி வெளிப்படுத்தும் ஆவலை நமக்குத் தூண்டின. அதன்மேல் அதன் பிரதியையே டுச் சுவடிகளைத் தேடியதில் இந்நகர் முத்திமண்ட பத் தேவாரத் திருக்கூட்டத்து ஸ்ரீமத் சுவாமிநாத பண்டாரத்தையா அவர்கள் தமது தந்தையார் சேக ரித்து வைத்திருந்த அநேகம் விசேஷ ஏட்டுப் பிரதி களிலொன்றாயிருந்த இதைத் தேடி யெடுத்துக்கொ டுத்து அதன் மகிமையையும் சொன்னார்கள். பிறகு இவ்வூர்க் கன்னார்த் தெருவிலுள்ள கருத்தாபத்தரெ ன்பவரிடத்தும், கட்டியப்பர் கோயில் தெற்கு மட விளாகம் நாராயணபிள்ளையிடத்தும் இந்தச்சுவடிக ளிருப்பது தெரிந்து அவர்களைக் கேட்க, அவ்விருவ ரும் மனமுவந்து தங்கள் தங்கள் பிரதிகளை யளித்த

தார்கள். அன்றியும், சமீபகாலத்தில் காலங்கடந்த குமாரகுரு வுபாத்தியாயரும் ஓர் பிரதியைத் தேடித்தந்ததோடு இந்நான்கு பிரதிகளையும் ஒப்புநோக்கி எழுதவும் நமக்கு உதவியாயிருந்தார். நமக்குக்கிடைத்த நான்கு பிரதிகளும் ஒன்றற்கொன்று வேறுபாடுடையனவாகவேயிருந்தன. ஆயினும், ஸ்ரீ சுவாமிநாதபண்டாரத்தையா அவர்களளித்த பிரதியே பேருபகாரமாயிருந்தது. திறப்புகழின் எழுத்துப்பிழைகளை நமக்குத் தெரிந்தவரையில் ஒருவாறு திருத்தி அச்சியற்ற முயலுங்கால் அப்புலவர் திலகம் முதன்முதல் வாய்மலர்ந்த ஸ்ரீ மெய்கண்டவேலாயுதசதகமொன்றிருப்பது தெரிந்து தேடுகையில், அதில் ஓர் பனையேட்டுச்சுவடி இவ்வூர் ஸ்ரீமாணிக்கதேசிகரிடமிருந்து கிடைத்தது. அதையும் சோதித்துத்தான் அச்சிடவேண்டுமென்று அன்பர்கள் பலருஞ்சொன்னபடியெழுதி முடித்து இவ்விரண்டையும் ஒன்றாய் அச்சியற்றலானேம். இன்னும் இப்புலவர் திருவாக்காயுள்ளன ஸ்ரீ மெய்கண்டவேலாயுதருவுலா, ஸ்ரீ காயாரோகணர் குறவஞ்சி யென்பனவாம். இப்புலவர் பெருமானுடைய திவ்வியமப்பழுத்த செவ்விய பாடல்கள் சிலவற்றிலடங்கியிருக்கும் விசேஷார்த்தங்கள் தெளிந்தோர்க்கேயன்றி யெம்போன்ற சாமான்னியர்களுக்குப் புலப்படுவது கஷ்டமாகும் அற்புதத தெய்வவாக்காயிருத்தல்பற்றி அவற்றிலுள்ளதை உள்ளபடி அச்சியற்றப்பெற்றதே தவிர ஒன்றைத் திருத்தவும், கூட்டவும், குறைக்கவும், புதுக்கவும் புகுந்தோமில்லையென்பது உண்மையாம். நூதனப்பிரதிஷ்டையிலும், புராதனப் பிரதிஷ்டையாயுள்ளதை ஜீரணமாகாமல் காப்பாற்றுவது பெரும்புண்ணியமாமென்பதை நினைத்துக் காலக்கிரமத்தில் செல்லின் வாயிற்செல்லாது ஓலைப்பிரதியிலிருந்ததைக் காகிதப்பிரதியில் லச்சுவிமானத்தேற்றிப் பவனிபோதரச் செய்தோமேயன்றி மற்றில்லையெனக். எழுதினவர்

கள் ஏட்டையும் படித்தவர்கள் பாட்டையுங் கெடு
த்திருப்பதியல்பாதலால இதைக்கண்ணுறுந்திருவரு
டசெல்வர்கள் அங்ஙனமேதாலதிருப்பதைத் திருத
்தித் தெரிவிக்கில் அதைச சிரசாகவகிதது அடுத்த
பதிப்பில் திருத்தமுறப பதிப்பிப்போமென்க. "கற்க
கசடறக் கற்பவைகற்றபி னிற்கவதற்குத்தக" வென
னும்பொய்யாமொழியாரின தெய்வவாக்குக்கிலக்கிய
மாய்க் கசடறக்கற்று அதன் வழியிலெட்டுணையுந்தவ
றாதொழுகுபவருமஇவவூர்ப பிரபுகுலதிலகருமாகிய
ஸ்ரீமத் சோ. வீரப்பசெட்டியார் அவர்களின் திருவா
க்கைஒருவாது இதை அச்சியற்றப பொருளுதவிபுரி
நதஷெ குமரகோவில் என வழங்குமஸ்ரீமெய்கண்ட
வேலாயுதராலய தர்மகர்த்தா மகா-ள-ள-ஸ்ரீ காத்தப்
பெருமாள் பிள்ளையவர்களின பொருளுபகாரம் பாராட
டததககது. அனறியும ஷெ உதவிககு உதவியாயி
ருநத இவவூர ஷாபபு மகா-ள-ஸ்ரீ முனிசாமிபிளளை
யவர்களின முயற்சிககும நன்றி பாராட்டுகின்றோம.
இவர்களெல்லாருக்கும ஷெ நூலகளின விசேடங
களை யெடுத்துககாட்டி யவற்றிலபிமானம வருவி
தது நமமையுஞ சோமபியிருக்கவொட்டாது அடிக்
கடி தூண்டுதலசெய்து இந்நறகருமத்தை முடிப்பி
தத ஸ்ரீபுண்டரீக தீர்த்தத்தின் மேல்கரையிலிருக்கும
ஜெனனமரண ரிஜிஸ்டரார் ஆபீஸ மகா-ள-ஸ்ரீ பொ
ன்னமபலபிள்ளையவர்களின விடாமுயற்சியையும,
பக்தி சிரத்தையையும்பற்றி யாம பெரிதுமகிழச்சிய
டைகின்றோம. மேற்குறித்த இநதநல்லோரனைவரும்
இதுபோன்றசறகருமங்களை மனமொழிமெய்களாற
றினந்தோறுஞ் செய்துகொண்டு சுகஜீவியாய் வாழ
ந்திருக்கத் திருவருள் புரியுமாறு கலியுகவரதராகிய
ஸ்ரீ மெய்கண்டவேலாயுதக் கடவுளின திவ்விய திரு
வடிகளை மனமொழி மெய்களாற்றினந்தோறும வழு
த்துகின்றோம.

துகசகாயம்

# அழகுமுத்துப்புலவர்

## சரித்திரச் சுருக்கம்.

கலியுகவரதராகிய ஸ்ரீ குமாரக்கடவுள் மேல் இந்த மெய்கண்ட வேலாயுதசதகம், திருப்புகழ்முதலிய திவ்யஸ்தோத்திரப்பாமாலைகளை அழகுபெறவணிந்தவிம் மகானுபாவரின் திருநாமம் அழகுமுத்துப்புலவரென்று நிச்சயமாகத் தெரியவருகிறது. அவருடையமற்றைய சரிதங்களொன்றும் நூலாதாரமாகத் தெரியவில்லையாயினும், கர்ணபரம்பரையாகக் கேள்வியுற்றிருந்ததை யிப்பொழுதிணடுள்ள முதியோர்பலர் வாயால் தெரிந்து ஒருவாறு சுருக்கி யெழுதுகிறோம்.

இவருடைய ஜனனபூமி தெய்வத்திருக்காவிரி மகாநதி சூழ்ந்த சோழவள நாட்டிலே மிக்கவளம் பெற்றதும், அளவற்ற மகாமகிமைகளை யுடையதுமாகிய சிவராஜதானி க்ஷேத்திர மென்னப்படும் இந்த நாகையம்பதி ஸ்ரீ நீலாயதாக்ஷியம்மன் வடக்கு வீதி யென்றும், சேனைக்குடையார் மரபிற்ஜனித்தவரென்றும், அவருடைய காலம் சற்றேறக்குறைய நூற்றைம்பது வருடங்களிருக்கலாமென்றுந் தெளிவாய்த்தெரியவருகிறது. இந்த அழகுமுத்துப்புலவரும் காளிதாசப்புலவர், காளமேகப்புலவர் முதலியவர்களைப்போலவே இளமையிற்கல்விகல்லாதவராயிருந்ததோடு பொருட்சம்பாத்திய மற்றவராகவும், சரீரத்தில் பூர்வகர்மரோகம் ஏதோவொன்றுடையவராகவுமிருந்ததால், யாவருமவெறுக்கத்தக்க இம்மூன்றையுமுடையஇவரை யிவருடையகுடும்பத்தாரகள

உபசரிக்காமல் உபேக்ஷைசெய்யத் தலைப்பட்டார்கள். குடும்பத்தாரால் புறக்கணிக்கப் பெற்ற இவருக்குக் "கருப்பைக்குள் முட்டைக்குட் கல்லினுட் டேரைக்கும் விருப்புற்றமுதளிக்கும்" மெய்யனுடைய திருவருளும், இவருடைய பூர்வபுண்ணிய விசேடமும் ஒத்திருந்தபடியால் இந்நாகைமாநகரின் ஸ்ரீ நீலாயதாக்ஷியம்மன் தெற்குவீதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மெய்கண்டவேலாயுதக் கடவுளாலயத்தில், ஆண்டுள்ளார் ஏவும் ஏவற் பணிவிடைகளைச்செய்து அவர்கள் கொடுப்பிக்கும் பிரசாதவமுதையுண்டு காலந்தள்ளிவந்தார். அங்ஙனமொழுகுநாளில் ஓர்நாளிரவு பணியூற்றத்தாலுண்டாகிய சிரமமேலிட்டால் ஆலயவாகன இடைவெளியில் அயர்ந்து நித்திரைபோய்விட்டார். அப்பொழுது அர்த்தசாம முடிந்தபின்னர்ப் பிரசாதங் கொடுக்கும்படி இவரை யழைக்க, அவர் வராமையால் ஆலயத்துள் நித்திரைபோவதையறியாத குருக்கள், பிராமணப்பிள்ளை முதலியோர் ஆலயத்தைத் திருக்காப்பிட்டுத் தத்தமிருப்பிடம் போய்விட்டார்கள். பிறகு நடுச்சாமத்தில் இவர் நித்திரைதெளிந்து பார்க்கையில் கோயில் திருக்காப்பிட்டிருக்கக் கண்டார். பசி அனல்போல கொளுந்தியது. என்செய்வார்? இன்னது செய்வதென்றறியாமல் பசிநோய் வருந்த வருந்தும் இவருடைய பசியையாற்றத்திருவுள்ளங்கொண்ட ஸ்ரீ மெய்கண்ட வேலாயுதமூர்த்தி அவருக்கு வழக்கமாய் அன்னங் கொடுத்துவரும் தங்கோயிற் பிராமணப்பிள்ளைவடிவங்கொண்டெழுந்தருளி இவர்முன் தோன்றி என்ன? அழகுமுத்து என்று வினவ, இவர்தாம் நித்திரைபோன விஷயத்தைச்சொல்லிப் பசிநோய் தன்னை அளவுகடந்து வருத்துவதால் அன்னங்கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பித்தார். உடனே ஐயராய்வந்தமெய்யர் திவ்யப் பிரசாதமும், தீர்த்தமும் கொடுத்தருள, இவர் உண்டு

பசிநோயோடுநீளத்திருந்துமாளாத்துயர்தந்து வந்த
பூர்வகாமநோயும்நீங்கப்பெற்றுக்களைதீர்ந்துகளிப்புற
றிருந்தார். அப்பொழுது ஐயா, "ஏ! அழகுமுத்து
ஏதாவதுபாட்டுப்பாடுவாயாக" வென்றருள, "ஐய
னே! கலவிமணம் வீசப்பெறாத நிரக்ஷரகுக்ஷியாகிய
தமியேன் எவரைக்குறித்து எவ்வாறுபாடவல்லேன்"
னென, நவரஸமொழுகக் கவிபாடுந்திறமையைத் தந்
தருளி "நான்தான்மெய்கண்டவேலவன், என்னை
யேபாடுவாயாக" வென்று திருவாய்மலர்ந்து மறைந்
தருள, கவிபாடுஞ் சக்தியுண்டாகிக் கடல் மடைதிற
ந்தாற்போல ஸ்ரீமெய்கண்ட வேலாயுதசதகம், என்
னும் நூலை ௧00 செய்யுள்களாற் பாடிமுடித்தார். அன்
றிரவுகழிந்து விடியற்காலையில் ஆலயத் திருக்கதவந்
திறப்போர் வந்து திறந்து பார்க்க உள்ளே வியாதி
நீங்கப்பெற்றுக் கடல்மடைதிறந்தாற்போற் கலவி
மடைதிறந்து கந்தவேள் சந்நிதியிற் சதகக் கவிபாடி
க்கொண்டிருக்கும் இவரைக் கண்டு அதிசயித்தார்
கள். அழகுமுத்து என்ற இயற்பெயர் காரணப்
பெயராகும்படி நேற்றுவரையிலிருந்தகொடியவியாதி
யும், கடிய கல்லாமையும்நீங்கிமன்மத ரூபம் பெற்றுக்
காளமேகம் பொழிவதுபோல் கவிமழைபொழியும்
அதிசயத்தைக்கண்டுவியலாதார் யார்? பொய்கண்
டார்பா லணுகாத மெய்கண்ட வேலவரின் திரு
வருட்டிறத்தை யாவருங்கொண்டாடினார்கள். 'ஐய
ன் தருளைப்பெற்றார்க் கதிசயமிதன்கொல் மூன்று
லையமுத்தொழிலுஞ்செய்யவல்லவரவரேயன்றோ?'
நிறக அன்றுமுதல் அழகுமுத்து என்பதோடு புலவ
ரென்பதையுங் கூட்டி அழகுமுத்துப்புலவரென்று
யாவரும் வழங்கி வந்தார்கள். அதன்பிறகு "திறப்
புகழ், மெய்கண்டவேலாயுதவுலா" என்னும் பிர
பந்தங்களை ஸ்ரீ குமாரக்கடவுள்பேரிலும், ஸ்ரீ காயா
ரோகணசுவாமிமேல் "குறவஞ்சி" என்றபிரபந்தத்
தையும் பாடிமுடித்துத் திருவருட்செல்வராயிருந்து

ஓர்நாள் சீர்காழிக்குச் சுவாமி தரிசனார்த்தம் சென
றிருந்தகாலையில் திருமேனிக்குப்பரிபூரணகாலம்வந்து
விட அவ்விடம் பரிபூரணமடைந்த அந்தநாள்நாழிகை
யில இவவிடம நாகை ஸ்ரீமெய்கண்டவேலவமூர்த்தி
சந்நிதியில் ஷை புலவர்பெருமான் நுழைந்ததாக
யாவருங்கண்டு திரும்பக் காணப்பெறாது அதிசயமு
ற்றுப் பிறகு சீகாழியில திருமேனியை நிறுத்தி
ஸ்ரீமெயகணடவேலவரின் திவ்விய திருவடி நீழலில்
ஐக்கியமானது தெரிந்து திருவருளைச் சிந்தித்து வா
தித்துக் களிப்படைந்திருந்தார்கள்.

இங்ஙனம்,

கலியுகாதி ௫௦௦௨ சார்வரி-௵ ஆவணி௴

ஜீ. சதாசிவம்பிள்ளை.
"நீலலோசனிப்" பத்திராதிபர்.
நாகபட்டினம்.

ஸ்ரீமெய்கண்டவேலவரின் திருவடிவாழ்க!

சுபம்.

வேலுமயிலுந்துணை.

# ஸ்ரீமெய்கண்டவேலாயுதசதகம்.

## விநாயகர் காப்பு.

பின்முடுகு வெண்பா

காலாயுதத்தான்மெய் கண்டவேலாயுதன்மேல்
வேலாயுதசதகமேயுரைக்க—சேலார்கண்
கும்பத்தனச் சம்பிரமக் கொம்பிமயத் தம்பிகைசொற்
கம்பமத்தத் தும்பிமுகன் காப்பு.

---

## நூல்

கலிவிருத்தம்—பிரிந்திசை வண்ணம்

பொன்பூத்ததாள் புரப்பாதமும் புரிபூத்தமார் பீராறுதோள்
முன்பூத்தகண் முன்னாறுகுடன்முடியாறுகைவடிவேலுமாய்
கொன்பூத்தவென் னிதயத்திலே குடிகொண்டருள்கூர்வா
யகூற, மின்பூத்தபா காசண்முகா வேலாயுதா வேலாயுதா.

கனவுகளுள்ளே நீவந்தெனைக் கலியாதெனக் கறைவித்ததும்
நினைவுகளுள்ளே கண்டேனல்லால் நினைவுக்கது நிசமல்லவே
சுனையுற்றநீர் நிழலல்லவே தோன்றுந்துணை யாய்நின்றிடு
வினையத்தையென்சொல்வேனையாவேலாயுதாவேலாயுதா

பன்னாளென்னு மூவொன்பதிற் பதின்மூன்றுநாள் பதினேழு
நாள், இன்னாளினி யின்னாளையே யென்பாரிவை யென்னா
ளுமே உன்னாளெனத்திரிவேனினி யொருநாளுமே இருநா
ளுமாய், மின்னாளிடப்பாகன்றரும் வேலாயுதாவேலாயுதா.

உனையே தெய்வ மாதாபிதா வுபதேசசற குருவென்று நான
நினையேனவாவொழியேனெறிநில்லேனறிருவெண்ணீறுமே
•புனையேனொரா றெனுமந்திரம புகழேனலோ திகழுவானவா
வினையேசெயவரு சனையாளுவாய வேலாயுதா வேலாயுதா.

பனைதீாததவன சிறைதீர்ததவன் பழிதீாததவன் பகை தீா
ததவன, கனைதீாததவன மறைதீாததவன கலிதீாததவன
கருதார்கள்வஞ், சனைதீாததவன முனைதீர்ததவன தமிழ
தீாததவன றமிழ்ப்பாணடியன, வினைதீர்ததவன் நீயலல
வோ வேலாயுதா வேலாயுதா. (௫)

சானக்கொடி வடமாகியுன கணணனகொடி யிடமாகியுன
ஞானகொடி யவர்பாலவரும சோழன்கொடி போய்சசிறு
வாய்,வானக்கொடியிடனுவினனவாழைககொடிதாளுஙகுடா
மீனககொடி யானெனபரே வேலாயுதா வேலாயுதா (௬)

ஒறுப்பாாகளுக் கொருநாட்பல னோஙகாரமா மாஙகாரமே
பொறுப்பாாகளுக் கானுலுமிப புவிமட்டுமே புகழென்று
தான, மறுப்பாடிலாகருறளசொலலிய வகைகண்டுமே வன
மதினுல, வெறுப்பாாகளுக கெனனோயலன வேலாயுதா
வேலாயுதா. (௭)

எறும்பானையீ றெடுத்தேனுட வினபம்பிறப் பொழிந்தேனிலை
யுறுமபாவமென் போற்செய்தபே ருலகததொரு வருமில்லை
யே, நறுமபாவினையபோற்கலவியும்ஞானததையும்நலகாவி
டில், வெறுமபாலடையமுதாகுமோ வேலாயுதாவேலாயுதா.

எறிகருளசுடாத் தீபத்தையே யேற்றுமபொழு திருளான
தைப், பறிக்குஞசுடா தானெனறதைபபாாததோருடைப்
படலததையே, மறிக்குமிட மதுகண்டலோ மாயைக்குநீவ
கைசொலலுவாய, வெறிக்குமபுய நயபாரனே வேலாயுதா
வேலாயுதா. (௯)

நீறிட்டவர் முகபங்கயம் நித்தந்தரி சிததாற்பலம
மாறிட்டம ருலகாளுவார் மறுஜென்மமும் வாராதென

வேறிட்டசே வுடையார்மழு வேற்கின்றது மிதற்கல்லவோ
வீறிட்டநீ றனுபூதிதான் வேலாயுதா வேலாயுதா. (௧0)

ஆளாமைபோ லடங்காமலே யஞ்சாமையாயறியாமையாய
வாளாமை நேத்திரமேபெறு மானார்கள்மேல் மயலாகியே
தாளாமையே செய்தேனலாற் றனமந்தலை காப்பாமெனும்
வேளாமையே செய்தேனிலை வேலாயுதா வேலாயுதா. (௧௧)

அளக்கிற்பெருங் கடலைக்கர மடக்குமுனி கயசதூனையா
விளக்கிற்கலை போதித்தநீ யெமக்கெப்படி போதித்திடில்
துளக்கிற்புனல் வாகாளுமேசொல்லத்தகுமெய்ஞ்ஞானமும்
விளக்கிற்கொழுந் தீபந்தமாம் வேலாயுதாவேலாயுதா. (௧௨)

துளாவுமதிப் பிடிதோணிமேற றூரதினிற் செல்வோமென
அளாவுமனம் பேராசையி லளந்ததைதயே யளப்பாயது
களாவினகனி மையானதுங் காயநின்றபின கனியுணடை
யாம், விளாவின்கனி கனியல்லவோவேலாயுதாவேலாயுதா.

தலையும்பெருங் குடும்பச்சுமைதாங்காதுதத்தளித்தாலொழி
யுலையும்சறுக் கலுமாகினு லுததியோகமேப படிச்செய்கு
வேன், அலையுங்கலை தெரிகலவியொன் றற்றுலினியானுன்
வனே,விலையும்பயிர் முளைசொல்லுமேவேலாயுதாவேலாயுதா

வள்ளற்சடை மீதேறியே மதித்தோணியாய் மாமக்கரா
வெள்ளப்படாத் துடுப்போடுகொக்கிறகெனும்பாயுமுளற
தாகியே, பளளப்புனற பாகீரதிப்பாலைக்குளேபாலாழி
யாம்,வெள்ளத்தினில்விளையாடுவாய்வேலாயுதாவேலாயுதா

உளர்க்கின்றமாமறைநான்முகன் மாலீசனும் வகையாகவே
டளக்கின்றமுக காணிக்குநீ யருக்காணியாய் யாவர்க்குமே
வுளக்கண்ணிருப் பதையெண்ணிலா ருரூர்தொறமுழல்
வாரவர், விளக்கன்றியேநீத்தேவோர்வேலாயுதாவேலாயுதா

கோளூர்வரா கமுழூரவே கூறுங்கர ணமும்யோகமும்
நாளூர்வதுர் திதியூர்வது நமனூர்புகும் நாளல்லவோ
மாளூர்விழிக் குறமாதுதெய் வானைததிரு மயில்பாகனே
வேளூரனே வயலூரனே வேலாயுதா வேலாயுதா. (மஎ)

வள்ளிக்குநே ரிடையார்க்குமொள் வாளுக்குநேர் விழிநாசி
கை, எள்ளிகைகநோ மொழியார்கருமவ வீசன்விழி யால
வெங்குறை, கொள்ளிக்குள மெலியாமலே கூடவாயருள்
கொமபொனதிலா, வெள்ளிக்குநா யகசுந்தரா வேலாயுதா
வேலாயுதா. (மஅ)

எள்ளாடுசெக் கைப்போலவு மீககாலையா டற்போலவுங்
களளாடுபூ மணம்வண்டுபோற் காப்பாற்றுயிர கவாவாமெ
மன, பளளாடுவேலையில்வந்துநாபலதெய்வநின்னிகர்வெய்
துமோ,வெள்ளாடரிபபோலாகுமோவேலாயுதாவேலாயுதா

உள்ளானைமெய யுரையானைமா லொழியானைவீண் பழியா
னைபொய, தளளானைவஞ் சகத்தானைநோய் தவிழானைபபா
தகததானா, கௌளானைவொண றறியானைநின் றேததானை
நீ ரெட்சிததிடாய், வெளளானைமா முகததானறுணை வே
லாயுதா வேலாயுதா. (உ0)

காலைகதிருப் போமென்பதும் நட்பிக்கையோ நறசந்தன
வாலைக்காந் தனில்லைவத்திடும்வாறல்லவோமாய்கின றநாள
காலைக்கடா வினிலேறிவெங் கட்காலனூர்கடினஞெசெயும
வேலைக்குநீ துணையாகுவாய வேலாயுதா வேலாயுதா.(உக)

கோளொன்றுமே சொல்வார்புகழ் கொள்ளாரையுங் குன்
றெப்பதாக, தோளென்றுநம் துரையென்றுசெஞ சுடசெ
ன்றுநீ துணையென்றுபொற், றுளென்றுசொன்னதுமன்றி
யே சற்றும்பய மிலலாதுசெவ, வேளென்றபா தகமென்று
போம் வேலாயுதா வேலாயுதா. (உஉ)

வளையாடமே கலையாடநூல வடமாடநூ புரமாடவே
இளையாடவே கொடியாடவே இனியாடவே யளிபாடமர்
துளையாடவே நடமாடுமோ தரைமேவுகா மியையாளுவாய
விளையாடுமோ மயில்பாகனே வேலாயுதா வேலாயுதா. (உ௩)

நீளாமலே வினைகாலமும் நேராமலே நிரையததல
ஆளாமலே பொறியாலுள மலையாமலே யனல்வாயுடல்
மாளாமலே மாண்டாலுனை மறவாமலே மறுஜென்மமு
மீளாமலே யெனையாளுவாய் வேலாயுதா வேலாயுதா.(உ௪)

சூழாமலே கலிதீவினை தொடராமலே படர்நல்வினை
பாழாமலே யயனுருப் பண்ணாமலே பெணாசையா
லாழாமலே யமதூதாவந் தணுகாமலே நரகத்தினவாய
வீழாமலே யெனையாளுவாய வேலாயுதா வேலாயுதா.(உ௫)

அழலுகிடும் விறகாகுமென் றறியாமலே பொறிமாதாகள
குழலுக்கிடும மலர்யாவையுங கொணடேகியுன றணடாம
ரைக, கழலுக்கிடும வகைசறறுமே கருதாமலென புருடா
யுளும், விழலுக்கிடும் புனலாகுமோவேலாயுதாவேலாயுதா.

வழியாயிரங் காட்டாமலோ வழியாயிரங கரைசெயகுவா
ய, பொழியாயிரமபேராயுனைப் புகழத்தொழுத தெரிசிக்க
வே, மொழியாயிரம நனறுவுடன் முளரிக்கர மோராயிரம
விழியாயிரம் பெற்றேனிலை வேலாயுதா வேலாயுதா. (உ௭)

பூவாகியுன் னடிசாாநதிலேன் பொடியாகியுன மெய்தீணடி
லேன, பாவாகியுன் போதாஙகிலேன் பணியாகியுன் புயமா
கிலேன, தேவாகியுன படையாகிலேன் சேயாவடியேனுய
வனே, மேவாதகு ரனைவெனறவா வேலாயுதா வேலாயுதா

தவதத்துக்குடம் பெடுதேனிலை தாரித்[illegible]த் தோற்றகதுட
னவததுக்குடம் பெ[illegible]குடம பெடுதே

AGOPAL P
BIKSHANDAR K
1259

தேனாறும, பலதத்குடம பெய்தததேனபிறா பிழிப்புக்குடம
பெய்ததேன மண, பித்தகுடம பெய்தத துயலேனு வேலா
யுதா வேலாயுதா　　(௨௯)

காலாயுதா வாசாலகா கபாலி [illegible]
சீலாவிசா காதாபரா தேவாதிபா சேனுதிபா
நாலாகலா கோலாகலா ஞானேதயா வேதோததமா
மேலானவா நாகாபுரா வேலாயுதா வேலாயுதா.　　(௩௰)

மாலென றுமென னிடமாகையால் மடவாரகளகண் வாளெ
ன றுசெனு, சேலென றுமைக கடலென றுமத தேனென று
மம மானென றுவெவ, கோனென றுசொன னதுமனறியே
குணகீனனுன் கூசாமலுண, வேலென றபா தகமென றுபோம்
வேலாயுதா வேலாயுதா.　　(௩௧)

வலலஙகமா முலைகாட்டியும வாளஙகமாம் விழிகாட்டியு
மலலஙகமாஙகுழல்காட்டியு மமுதஙகமாமொழிகாட்டியும்
பலலஙகமாம நகைகாட்டியும பஙகபபாத தையாசெயதிடுமே
விலலஙகமே தீரததாருவாய வேலாயுதா வேலாயுதா.

கல்லாதவன றுதியாதவன கருதாதவன் கற்றோரகள்பாற
செலலாதவன பணியாதவன றெளியாதவன செவியாதவன
பொலலாதவன பூணுதவன பூசாதவன் புலனைக்கதையும
வெலலாதவ னினியுயவனே வேலாயுதா வேலாயுதா. (௩௩)

விலஙகைகலவி யம்மெனறடி மேலாசசனை செயயாககொடு
விலஙகைகபபுரபப துமுனகடன் மிகவெமபினே னுனைநம்பி
னேனை, விலஙகைகசசெயம பெறுசூரனை வெனறவிபூ தாக
ளகாவினில, விலஙகைகததறித திடுகநதனே வேலாயுதா
வேலாயுதா　　(௩௪)

மாலுககிணை தானுகியே வழஙகாதவன வயிறேறுபெருஞ
சாலுககிணை தானவன றருவாளையுந தடைசெய்குவே
ணுலுக்கிணை யாய்நலகிடா தளிக்குநதரு விகளுநதடை
வேலுக்கிணை தானுவனே வேலாயுதா வேலாயுதா.　　(௩௫)

சேலுக்குவேல் வாளுக்குமை திளைக்குங்கரு விளைக்குமது
காலுக்குநீள் கடலுக்குமக் கடுவுக்குமா வடுவுக்குவெங்
கோலுக்குமங் குடங்கைக்குநற் குவளைக்குமா னெமனுக்கு
மவை,வேலுக்குநேர்விழிவள்ளிசேரவேலாயுதாவேலாயுதா.

மாலைப்பிறை போற்செல்வமும் வளராமலே வறுமைசதுய
ராக், காலைக்கதி ரெழுமுச்சியிற் கனலொத்திடுங் கடினதி
னால், ஆலைக்கிடுங் கழையாகினே னழலுக்கிடு மெழுகாகி
னேனை, வேலைக்கிடுந் தாருகினேனை வேலாயுதா வேலாயுதா

தோலுந்துணை யென்புந்துணை துணையாகையால் துணையா
கிய, காலுந்துணை கையுந்துணை கணுவுந்துணை கண்புக்
கெலா, மாலுந்துணை புதுபோல்வரு மாதங்கநேர் போதி
லுனை, வேலுந்துணை மயிலுந்துணை வேலாயுதா வேலாயுதா.

தலைக்கபுற மோடும்புனல் சாணோடியென முழமோடியென
மலைக்கப்புற முயர்பாவமும் வளர்ந்தாலுயும வகையேதினி
நிலைக்கும்படி தயைசெய்குவாய் நீயன்றிவே றில்லைப்பிறை
மிலைக்குஞ்சடைப் பரமன்றரும் வேலாயுதா வேலாயுதா.(;)

நற்புத்தியா நன்மார்க்கரா நன்ஞானரா நல்லோரவயிற
றற்புதத்தியி னற்கோள்பதி னோராமிடத துதயஞ்செயக்
கறபுத்தியாய்க் கதிராளர்போற கற்பித்தியாய கருணாகரா
வெறபத்திமா முகனாதுணை வேலாயுதா வேலாயுதா. (௪௦)

நாலாகலைக் கீரர்க்குவேல் நடத்தும்படி நமனையதினால்
சேலாகிய விழிவள்ளியார் தெய்வானையாக் தேனுருடன
மாலாகிநீ விளையாடினால் மயிலாகிலு மயில்தபினால்
வேலாகிலும் வரக்காட்டுவாய் வேலாயுதா வேலாயுதா. (௪௧)

தலையாந்திறப் பிணைகாட்டியுந் தாளாந்திறச் சிலைகாட்டியு
மலையாழியில் விழுவார்கள்போ லழுந்தாமலு மிதவாமலுங்
தொலையாதசஞ் சலவாழ்க்கையிற் சுழல்போதொரு சுறவாய்
வரும், விலைமாதர்பா லுறவாவனே வேலாயுதா வேலாயுதா.

துரக்கதைதையே செயதேனலாற் சுகிர்ததலைதயே செய்தே
னிலே, யுரகத்தினுக் கமுதங்கொடுத்த துறவாடியே பெறு
நஞ்சுபோல, நரகத்தையே பெறுமெய்ப்பொருள் ஞானலக
வே யூனலருவரா, விரசத்திலே மனம்வைப்பனோ வேலா
யுதா வேலாயுதா. (சக)

சரதத்தைதயே சொல்லாமலே சரதத்தைதயே சொல்வாரம
தன, நிரதத்தைதயே நிகரல்குலா ரின்பத்தைதயே யனபுறறு
நான், சுரததலைதயேசெய்தேனலாற்சுகிர்தத்தைதயேதருகார்
த்திகை, விரததலைதயேசெய்தேனிலேவேலாயுதாவேலாயுதா.

காரானமே னியன்வாசவன் கஞ்சாசன னஞ்சானன
ஞூராலுமேமுடியாவணமம்யாமேமுடித்தருள்வோமெனச்
சூராதிசூ ரனைவென் றவிண் டொடுக்கிடத் துவசம்பெறு
வீராதிவீ ரனும்நீயலோ வேலாயுதா வேலாயுதா. (ருச)

அருந்தாதைதாய் மகன்றாரமா மமெபாரமே சுமந்தாசை
யால், வருந்தாதெலா மெலிந்தோயவோ வலைக்தேறகூ
னுடமபானவா, ரறிந்தாரிதோ மடிந்தாரையோ வெனும்
போதிலே செழுநதியினவாய், விருந்தாகவே யிருக்தேனை
யான் வேலாயுதா வேலாயுதா. (சசு)

துரும்பானதைத் தூணக்குவாய்த் தூணனதைத் துரும்பா
க்குவா, யரும்பாரமே ருவைரே ணுவா யணுவானதை மக
மேருவா, யிரும்பாரிற்செய் வாயசாட்லைடதா னில்லாமற்
பம் பரமாட்டிய, விரும்பாணமையின றிறமென்சொல்
வேன வேலாயுதா வேலாயுதா. (சஎ)

பூரிததிடுஞ சுடரிததிடும் புளகிததிடும் பூணாரமே
பாரித்திடு மிளநீரெனப் பசசென்றிடுமெ லெச்சென்றலங
காரித்தசெப் பெனவிமமியே கச்சுககடங் காமற்பொரும்
வேரித்தனக குறமங்கைசோ வேலாயுதாவேலாயுதா.(சஅ)

வருதிட்டமும் பொருதிட்டமும் மதிதிட்டமும் விதிதி
ட்டமு, மொருதிட்டமோ பலதிட்டமோ வோதிட்ட

சொல வாதிட்டமே, பொருதிடட்குரனைவேலினாற் பொ
ளறிட்டுற நினதெனனவே, விருதிடடசேவறச்சதனு வேலா
யுதா வேலாயுதா. (சகூ)

குரலைகொடி சாவற்பரி கொஙகைததுணை பதியாயுத
மிரலைககக விடைதாரமின னெஙகுனுநீ பொறாக்ககசடன
நரலைகொரு மகராகா நயனததிலே கைபட்டிடில
விரலைததறித திடுவாாகளோ வேலாயுதாவேலாயுதா. (ருய)

மயில்மஞ்சினைக் கண்டாற்போல மகிழவெய்தியே வாஞசி
ததபேர்க, கயிலமஞசனப் பதுமசசர ணுதாரமென றறியா
மலே, துயிலமஞசமா ளிகைசெமபொனே சுகமெனறுமே
துணியும்பொலேன், வெயில்மஞசளே நிலையெனபனே
வேலாயுதா வேலாயுதா. (ருக)

கைகண்டநெல் லிவையப்போலவே காங்கணடுளங் களி
கூரவே, யைகண்டமே லுறுநாளிலவந தஞசேலென வரு
ள்செய்குவாய், செயகண்டநா கையிலுதசமத தியாகேசா
தன் சேயாகுகா, மெயகண்டவே லாசணமுகா வேலாயுதா
வேலாயுதா. (ருஉ)

பயனுகைககே தமிழ்பாடினுற் பசாசிபபாம பரிசிததிடில்
வயனுகைககே யெழுதாவிடி லாற்றஙசரை மரமலலவோ
கயனுகைக்கே சரிமாாகசமாக காலாடிதன றுணைபானவா
வியனுகைககே கயவாசனு வேலாயுதா வேலாயுதா (ருங)

ஈயாமலும லலோாகளை யெணணுமலு மெண்ணிக்கலை
யாயாமலுஙக சேளாமலு மறியாமலு மறிவீனாபா
லோயாமலுநதமி ழசொலவியுமுணடோபலனுனைநமபினே
ன, வீயாமலுனனருளசெய்குவாய வேலாயுதா வேலாயுதா

கைசொலலுவேன புடைகைகுளே கைசசாடையுஞசொ
லவேன்மழு, நெய்சொலலுநினனையெனபது நீயெனறுளம

நினையாதவன், பொயசொலலுவேன வசைசொலலுவேன
புறஞ்சொலலுவேன பிழைசொலலுவேன, மெயசொல்லு
வே னறிகின றலன வேலாயுதா வேலாயுதா (௫௫)

தும்பிக்கையா னவனுக்கொரு துணையானவா சுராசேவிதா
நமபிக்கைக் யலலாமலே நாடேடொரு தெய்வததையு
மமபிக்கைகோ விழியாமொழி யாாவுககுடை யானெனறு
தான,வெம்பிக்கைவிட்டாலுயவனோவேலாயுதாவேலாயுதா·

ஆமபோதுமவேல மயிலுநதுணை யாகாமலே யாசஙகளும்,
போமபோதுமவேல் மயிலுநதுணை பொறிநுடபமும நெறி
தபபியே, சாமபோதுமவேல மயிலுநதுணை சடமவீழநத
பின பிடிசாமபலாய, வேமபோதுமவேல மயிலுநதுணை
வேலாயுதா வேலாயுதா. (௫௭)

காமபாகுமென் றேளவலலியாா காநதாபுகழச சேந்தா
விடப, பாம்பாகுமா பரணனாறு பாலாதிருப புகழுக்குமெ
ய,யாமபாகுபோல நறகிரஞ சருளுநதமிழக்கடியேனறமிழ
வேமபாகுமே கருமபாகுமோ வேலாயுதா வேலாயுதா(௫௮)

காப்பாகிலும படைபபாகிலுங் கருதாமலே யழிப்பாகிலு
மூபபாகிலும வேளவிததொகை முடிப்பாகிலு மறறேரிலுங
கோபபானசெந தமிழபாடியே கொண்டாளுமென குல
தெயவமதி, மீப்பானுவை நிகாகுனாடலா வேலாயுதாவேலா
யுதா. (௫௯)

அப்பததரா மறுபததுமூ வடியாாகளுக் காயுன்பிதா
செபபததொடு வநதாட்கொளுஞ சேதிககுநான சிறியே
னெனிற, கொப்பததிலவீழ கரியெனனவே கூற்றுணவனை
கொடுபோகவே, வெபபததுடன வாராமலாள வேலாயுதா
வேலாயுதா (௬0)

நீநதாததுயா கடடாறறினில நீகைவிடில நிலையேதினி
சேநதாகடம் பாசண்முகா சேயாகுகா தெய்வானைதன

காநதாசிலம் பாகாங்கயா கந்தாகதிர் காமததினில்
வேந்தாவருள் கூர்ந்தாளுவாய் வேலாயுதா வேலாயுதா.(௬௧)

அந்தப்பதஞ் சரியைக்குமெய் யவிரப்பதங் கிரியைக்குமே
யிந்தப்பதம் யோகாக்குமே யீற்றுப்பதம் ஞானர்க்குமே
தொந்தபபத மாளுவினி சும்மாவிடு வேறேவரா
விநதப்பதம் தந்தாளுவாய் வேலாயுதா வேலாயுதா. (௬௨)

சிநதாகுலந் தீர்ப்பாயினித் திராவிடிற் செவவேளெனக்
கந்தாவெனச் சொல்வேனுனைக் கடம்பாபெருங் கறபாலைவ
தன், மைந்தாவெனப் பிததனறரு மகனேயென வசையேசு
வேன், விந்தாசலப் புயபாரனே வேலாயுதா வேலாயுதா.

வந்திட்டது கண்டேலலால் வாராமையைக் கணடேனிலை
நொந்திட்டதா விக்கென்பனோ கோய்சேருடற் கேனென
பனோ, முந்திட்டவோ நின்றொப்பதா மூன்றும்பிரி பாகந
தரில், வெந்திட்டதும் வினையெய்துமோ வேலாயுதா வேலா
யுதா. (௬௪)

போதாந்தமாய்ச் சுடரெய்தியே போய்நின்றபின் ஞானாநத
மாய், மாதாந்தமாய் வருஷாந்தமாய் வயதாநதமாய் வருமு
ன்னரே, நாதாந்தனே லோகாந்தமாய் ஞானந்தமே வரநல
குவாய், வேதாந்தனே யேகாந்தனேவேலாயுதாவேலாயுதா.

முத்தேபத்து மத்தேவளர் முதலேயொரு முத்தேவர்சம்
பததேமறைப் பொருளேபொருட் பரமேபர மானந்தமே
சித்தேபரி சிததோருளத் தேவேமிகத தெய்வப்பயிர்
வித்தேவிலைக் கதியாதிபா வேலாயுதா வேலாயுதா.(௬௬)

மதனப்படும் மலர்ணைதக்கவே வடுவிட்டபுண் ணொருபக்கமா
ய்ச், சதனப்படா முலையார்நகங் கைதகிளறபுண் ணொருப
ககமா, யதனப்படும் வலியோடெம னவோள்புணி லிடுகோ
லென, யிதனப்படுமெனையாளுவாய்வேலாயுதாவேலாயுதா.

மாதாபிதா வாசானுநீ மாமானுநீ மாதேவனீ
யாதாரநீ யாகாயநீ டாகாரநீ யாள்வானுநீ
தாதாவுநீ தாரானுநீ சார்வானுநீ சாரானுநீ
வேதாவுமநீ மாவீசனீ வேலாயுதா வேலாயுதா. (சுஅ)

வேதாரணி யஞ்சேர்ந்திடில் விடுவார்களோ சேவிப்பது
வேதாரணியமைப்பணிவிடையல்லவோ வினிமேற்குறை
வேதாரணிச் சடிலன்றரு விழியேவிழி மணியேமிக
வேதாரணி மணிமாாபனே வேலாயுதா வேலாயுதா. (சுக)

மதிவண்ணமா முகவண்ணமு மலைவண்ணமாம் புயவண்ண
மும், நிதிவண்ணமே னியின்வண்ணமும் நிறைவண்ணமே
விழிகொள்ளுமோ, யதிவர்ணமங் கெதிவண்ணமே யை
வணமே யிவ்வண்ணமோ, விதிவண்ணமு மெவவண்ண
மோ வேலாயுதா வேலாயுதா. (எம)

வேதண்டகோ தண்டனறரு வேளேதிரு மெய்ஞ்ஞானமாம்
கோதண்டமால் மருகாவுனைக் கும்பிட்டவர் முனவாதுநீ
வேதணடவே பாரப்பிணி விட்டோடமெய் யருள்கூருவாய
வேதண்டகு ரனைவெனறவா வேலாயுதாவேலாயுதா. (எக)

கத்தூரியே யக்காரமே கர்ப்பூரமே கட்டாணியே
முத்தாரமே சட்கோணமே முககோணமா நிட்சேபமே
கொத்தாருவே தத்தானுநினைகொட்டாரமேயெட்டாதுறால்
விதாரநீ பத்தாமனே வேலாயுதா வேலாயுதா. (எஉ)

வேதத்துற பொருளெனறுனை மெய்யுண்மையாய்விரும்பி
க்கொள, வேததுவகிலையாமதுமிருகண்டுவின்மகனுக்குற
வேதத்துவ ரும்போதுபொய மெய்யாகவு மிலையோமிக
வேதத்துமஞ் ஞையிலேறிய வேலாயுதா வேலாயுதா. (எங)

கண்ணேறுசற் றுணுகாமலே காப்பாயெனைக் காரானுமோ
தொண்ணூறுட னொருபத்துமே சுகமாயுனைத்தொழுதேத்த

வே, தண்ணீறுமெய்ஞ்ஞானதையாதருநீறுசுந்தரநீறெனும
வெண்ணீறதந்தென்னையாளுவாய் வேலாயுதா வேலாயுதா.

பூணாசையுங கலையாசையும் பொருளாசையும் பொருளசே
ரந்திடிற, பேணாசையுமமகவாசையுமபெண்ணாசையும மண
ணாசையு, மூணாசையும் பதினாறெனவோதாசையும பேரா
சையாம், வீணாசையென் றொழியுஙகொலோ வேலாயுதா
வேலாயுதா. (எரு)

கண்ணபபனா லுதைபட்டதுங கற்சாககிய ரெறிபட்டது
மணணபபடும் விசயனகைவில லடிபட்டது மரனலலவோ
வெணணப்படு மோட்சநதர விலையோவடி யேனசொலவிய
விணணப்பஙகேட டருளகூருவாய வேலாயுதாவேலாயுதா

தீண்டாவழும பிரேதந்தசை சோரநதெனபுதோல போர
த்தனபுட, னூண்டாஙகுமொனபது வாசனமேலொருவா
சலி லுண்டாகியே, மாண்டாலொரு பிடிசாமபலாய் மண
ணாய்விடு மாயசசடம, வேண்டாமையா வேண்டாமையா
வேலாயுதா வேலாயுதா. (எஎ)

திண்டாட்டந்தீ மனறூட்டமே செய்வாயதயித் தியரான
வா, கொண்டாட்டமுங களியாட்டமுங குடியாட்டமுங
கூத்தாட்டமும, வண்டாட்டமும வமபாட்டமும மாறூ
ட்டமும போராட்டமும, மிண்டாட்டமுந தீரபொரும
வேலாயுதா வேலாயுதா. (எஅ)

கண்டாமரை முகந்தாமரை கைத்தாமரை கழலாமடி
யொண்டாமரை வாயத்தாமரை யுளத்தாமரை யோரந
தெயதுவாய், வண்டாமரைக் கொடிபோலளி வானமு
ட்டவே மதியானது, வெண்டாமரை யாமநாகையில் வே
லாயுதா வேலாயுதா. (எகூ)

தூண்டாமலும் பாபங்கள்பொய சொல்லாமலும விலைமா
தரைத், தீண்டாமலு மறிவீனரைச் சேராமலுஞ் சமயங்க

னிற, முண்டாமலும் பிணியாலழனரு சலியாமலும் பரதா
ரமே, வேண்டாமலுமருள்கூருவாய்வேலாயுதா வேலாயுதா

ஆண்டுபிறக் குந்திங்கள் ராறிறறிதி யையமறூனறினு
மாண்டுபிறக் குமமேழினில வாரமிரு பததேழினு
மீண்டுபிறக குமயாவுமே நிலையாதகா ரணமல்லவோ
மீண்டுமெபிறப பெய்தாமலர்ள வேலாயுதா வேலாயுதா ()

இடியாலடி படுமாசுண மெனவேவரு மெமதூதர்கைத
தடியாலடி படுமெனறுயா சாறறுநதிரு வெண்ணீறெனும்
பொடியாலடி படவேயருள புரிவாயுனைப போறறுாகளை
போல், மிடியாலடி படநீதியோ வேலாயுதா வேலாயுதா.()

படவுமபடா திலலாமையிற் படடாலுமோ பாவங்களாற்
கெடவுமபடாத தீயாகளைக கெஞசபபடா துணடிககிரை
யிடவுமபடா குடிமைசசுமை யெடுககப்படாதெனறாலுமோ
விடவுமபடா தெனசெய்குவேன் வேலாயுதா வேலாயுதா.()

உடலைபபல நாளுமெடுதது தோய்வின்றியே யொழியாப
பெருங, கடலைககடப பதுமெந்தநாட் கப்பற்ககப படுகோக
மாய, நடலைககுடி மையைநமபியே நமனுக்கிறைக் குடியா
வனே, விடலைககுரு பரநாதனே வேலாயுதா வேலாயுதா.

ஆடிக்கைகளோ தெணடிததபோக களிததோாகளு மருமநத
பொன், றேடிககைகயா லீநதோாகளுஞ சீரேடாாய்ச சீமா
னகளாய, வாடிககைமேல வாடிககையாய் வரபபணனு
முன மதிமநதிரம, வேடிககைமேல வேடிககைகாண வேலா
யுதா வேலாயுதா. (௮௫)

மடபபாவைமா விடப்பாாவையோ நெருப்பாறுசோமயிா
பபாலமே, நடபபாாகளோ விளிப்போதுநீ நயப்பாகநின
னீரா றுகண, ணிடபபாாவைதா வுடறபாதியா மலைபபாவை
யா ருழைபபாணியார், விடைப்பாலருள் தயபபாலனே
வேலாயுதா வேலாயுதா. (௮௬)

கடைதந்தெனை நடத்திப்பிறர் நகைதந்தது மாற்றிகலை
யுடைதந்தமு தூண்டந்தபூ ணொளிதந்துயர் களிதந்தருள்
மடைதந்துநல் வழிதந்தெமன் மதியாதனைப் பிரியாத்தவ
விடைதந்தெனை யாள்வாயினி வேலாயுதா வேலாயுதா. ()

எடுப்பார்களும் பல்லக்கின்மே லிருப்பார்களு மியர்தமமிலே
கொடுப்பாரையுங் கொடுக்காரையுங் குறியாலறி விததாய்
கொடை, தடுப்பாரையுங் காட்டாமலே தனைவந்தடைந்
தோர்க்காயுயிர், விடுப்பாரையுங் காட்டாயினி வேலாயுதா
வேலாயுதா. (அஅ)

எட்டிக்கனி கண்டாலழு கெடுத்துப்புசிப் பாரோவெறுங்
குட்டிச்சுவ ரொணுலோபனைக் குறியாவண மருள்வாய்சமா
கிட்டிப்பொரு மசுரப்படை கெட்டுப்பிற கிட்டுச்செல
வெட்டிப்பலியிட்டுப்பொரும் வேலாயுதா வேலாயுதா.(அகூ)

உடற்கைப்பழ வினைத்தோற்பையை யூரும்புழு வுறைகந்த
லைச், சடக்கைக்குதித் துயிர்போய்விடிற் றுயுந்தொடில
ஸ்நானஞ்செயுந், தொடக்கைக்கழு வுண்ணுமபொதிசோற்
றைக்குறு நாற்றைப்பெரு, விடக்கைச்சுமந்தெனனுளபலன
வேலாயுதா வேலாயுதா. (கூ0)

மோடத்தைவே ரறநீக்கியே மோனத்தினால் ஞானத்தினாற்
றூடத்தையு மறநீக்கியே சுட்டாய்ச்சொலுஞ் சட்டாக்கரப்
பாடத்தையும் வருவித்தபின் பருவப்படும் பண்டாரமாம
வேடத்தையுந் தந்தாளுவாய் வேலாயுதா வேலாயுதா. (கூக)

செஞ்ஞாயிறு நாள்வாங்கியே செல்லசமன் செங்கைப்ப
டல், பஞ்ஞாகப்பாய்ப் படுதோரையப்படியாக்கிலெபப
டியுய்குவேன. அஞ்ஞானமாக திமிரங்களை யாதித்தனமுன
பனியாக்கியே, மெஞ்ஞானமே தந்தாளுவாய் வேலாயுதா
வேலாயுதா. (கூஉ)

அஞ்சாமலே துயராமலே சோர்மலே சோம்பாமலே
யெஞ்சாமலே யிரியாமலே யேறாமலே யில்லாமையா
லஞ்சாமலநோ யணுகாமலமெய் யழியாமலே யாகாமிய
மிஞ்சாமலேயருள்வாயவரம் வேலாயுதா வேலாயுதா.(கூரு)

நேசிக்குமுன் னடியார்களை நேசிக்கவும் நின்பாதமே
பூசிக்கவு மானந்தமாயப் பூரிக்கவும் போற்றத்தமிழ
வாசிக்கவு மவுனத்தினே வாழ்விக்கவுஞ் செய்யாமலே
வேசிக்குமால் கொள்ளைவைப்பையோவேலாயுதா வேலாயுதா

வெங்கைக்குநேர் சிலையாளரைவெறுவாய்க்கிலை கெட்டோ
ரகளை, வெஙகைத்தனை பதியெனனவே வீணிற்றமிழ் பாடா
மலாள், வெங்கைப்பிரானருள்சேயனேமிக்கார்குறத்திக்கா
கவே, வெங்கைத்தருவாயநின்றிடும் வேலாயுதாவேலாயுதா.

வாகாமலர் வேதப்பிரான் மணத்தச்சன்னைவத் திகெப்பலை
யாகாமியக் கடல்மேற்பொறி யைம்பாயினு லலையாமலே
பாகாமெனுஞா னத்தீவுறப் பதபங்கயக் கரையேற்றிடுமெ
மீகாமனீ தானேயலோ வேலாயுதா வேலாயுதா. (கூசு)

பகடன்புற வுயிருக்கெலாம் பறந்திட்டபுள் விலங்குக்கட
ககடன்கள வுக்காலைய னைம்பூதியத் தானூர்ந்திடுஞ்
சகடன்குணம்பொறைகல்விநறறவமறறவன் சகலர்க்குமே
விகடனறனக் கருள்கூருவாய் வேலாயுதா வேலாயுதா. ()

மோகாடவி வளருங்கொலோ முருகாடவிக் குழலார்கள்
மேல், மாகாடவிநிலவென்னவேவாணாளெலாம்வீணாளதாம்
நாகாடவி யிடியென்னவே நமன்வநதிடும் நாள்வந்துகா
மேகாடவி திகழ்நாகைவாழ வேலாயுதா வேலாயுதா. ()

அருகிக்குவே றொருதிக்குமில் லாதிக்குடிலைப்பேர்வினைப்
பருதிக்குள மெலியாதருள் பரிதிக்குநீ கருதிக்குளார்

தொகுதிக்க தநீ தகுதிக்குநீ சோதிக்குரு பரனேயருள
மிருக்கதநீ யல்லாதிலை வேலாயுதா வேலாயுதா (௯௯)

குகவாழிசெந் தாராவினன் குடிவாழிபுட கொடிவாழிசண
முகவாழிசூரப பகைவாழியுன முனவாழிநீ பருசேருமா
பகவாழியிச சதகநதனைப் படிததோாகளுநு கறறோாகளு
மிகவாழிவேல மயில்வாழியே வேலாயுதாவேலாயுதா(௧௦௦)

# ஸ்ரீ மெய்கண்ட வேலாயுத சதகம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# திருநாகையில்

திருக்கோயில் கொண்டு விளங்கும்

## ஸ்ரீமெய்கண்டவேலவரென்னும்

## குமாரக்கடவுள் பேரில்

# திறப்புகழ்.

### விநாயகர் காப்பு—வெண்பா.

வடியைப்பொருநெடுங்கண் வல்லையையாம் பசசைப
பிடியைப புணர்களிற்றைப்பேணி—யடியைத
தினம்நினைந்தாரெய்தாச சிறப்புவேறுண்டோ
மனமநினைந்ததெல்லாம வரும்.

வளைநிகர்குழையாள்வள்ளிககொடிபுணர்ந்த
களளவிழுமநீபாமெயகணடவாமேல—வெளளை
நிறபபுகழைபபாரினிறுத்துதறகாவேணடித
திறப்புகழைச்சொனனேனறெளிநது.

---

### நாகாபரணப் பிள்ளையார் துதி.

க. தானனதனத்தன தனதனதன
தானனதனத்தன தனதனதன
தானனதனத்தன தனதனதன—தனதான.

சீராசுவை முப்பழமுடனே யிள
நீர்பாயசமிக் கதிரசமாவடை
தேனமோதக மெட்பொரி புளியோதரை கடோரை

தேன்மாதுள நற்கனிகுளமா ரவல்
நீடாழை பருப்பனையொடு தோசைகள்
சேதாவமுதத்துட னிவையாவையு மயிலவோனே
பாரார் கயிலைகிரியர னாருள
வேலாயுத மெய்க்குமர சிகாமணி
பாகாா வசனக்குறமகள் பால்வரு மலாமீதே
பாவாணா துதிதிடு மியல்பாயொரு
நூறான திறப்புகழெனவே முதிா
பாமாலை யுரைத்திட வருள்கூாவது மொருநாளே
வாராழிவளைத்திடு மகமேருவை
யேடாக மருப்பொரு கரமேகொடு
மாபாரதமுற்றெழுதியகாரண வடிவோனே
மால்யானை முகத்தவுணனையே யெதிா
போராடி யுயிர்ப் பலிகொளுநாயக
மாதேவர் துதிக்கையின் மலாவயமறை புரிகோவே
நாராயண னுக்கொருமருகா வுயா
காரோணர் வரதகினில்வருபாலக
நால்வாய்மதமுக்கண துடைமீதொரு மயிலோனே
நாவாய்குண பற்பலபொருணீடிய
மேகாடவி சுற்றிய திருநாகையி
லுகாபரணக் கணபதியே கட வுளாவாழவே

---

உ. தானனதான தனத்தனத்தன
தானனதான தனததனத்தன
தானனதான தனததனத்தன—தனதான.

மட்டாருமூவிரு பங்கயமாகிய
சட்கோணமீதிலிருந்த சொரூபமு
வறுறுதமூவிரு சக்திரர்கூடிய முகமாறும
மற்றோள்களாறிரு செம்பொனின்மேருவு
நற்காதிலாறிரு செஞ்சுடரேநிறை
வைப்பாகவே வளர்குண்டலராசியு மறைநாலும்

முட்டாமலோதிய செங்கனிவாயமு
தப்பாவையாறிரு கணகளுமே யணி
முத்தாரமாபமு மம்புயமே நிகர் கயமேத
முக்கோணமாகியவெம பகை வேலுடன்
மிக்கானதோகையில் வந்தவிநோதமு
முற்கோலியேயறியும்படியேவர மருள்வாயே
அட்டாளதேச மடஙகலுமேருவு
மெட்டானமாதிரமுமபதிணு லுல
கபபாலுமேயுளவணடருமே பணி யிருபாதா
அககாரமேகனியினசுவையே மது
ரப்பாகமே குளிர்சந்தனமே கும
ரப்பாருகாகுற மஙகைமணுகர குருநாதா
கட்டாமமான கடமபணிமாபக
நிகேஷபமே சிவசந்ததியே கன
சத்தாருவேமணியொன்பதுபேர் துணை யெனும்வீரா
கற்பூரமேமறையின்பொருளேகமழ
கஸ்தூரியேகையிலங்குசனு ருயர்
கற்றூணிலாடிய வைங்கரனூர்* துணை முருகோனே.

---

ந. தனதனன தானதான
தனதனன தானதான
தனதனன தானதான—தனதான.

மாதா வனப்பிளமை
வீணு யழித்தவனை
வாணுள்சிறுத்தவனை யிடர்தீரய்

---

* இந்ததத்தன விநாயகர் ஸ்ரீ காயாரோகணேஸ்வர ராலயத்தூணிலதாணடவம்புரிநது ஆண்டி ரக்ஷித்துவந்தவா. திருப்பணிவேலைநடத்துகையில் அக்கற்றூண் பிரிக்கப்பட்ட காலத்துத் தானிருந்தவிடத்தைவிட்டுப் பழணியாண்டவா சந்நிதிப் பக்கததில் விளஙகும இவவிநாயகக்கடவுளுக்குத தான் கற்றூணிலாடிய ஐங்கரனென்று சொல்லப்படுகிறது.

வாழ்வோ தரித்திரனை
ஊனோ பெருத்தவனை
வாயோ வசத்தியனை நிலைபேறும்

ஆதார மற்றவனை
ஆசாரம் விட்டவனை
யாபாசமுற்றவனை யறுபாதே

டாறுறு தத்துவனை
யாகாத சூத்திரனை
யாளாக நற்கருணை புரிவாயே

வேதாளமுட்ட வெழு
பாதாளமுட்ட வெழு
மேலோகமுட்ட வொரு திரையாக

வேதாநிறுத்து படை
சூராமாளவிட்ட கையில்
வேலாயுதப் ப்ரபுட மறைதேடும்

நாதா சிவப்பொருளு
பாதா பொருப்பிலுறை
ஞானா நடத்து மொரு மயில்வீரா

நாராயணற் கரிய
காரோணருக் கினிய
நாகாபுரிக்குளமர் முருகோனே.

---

ச. தானநதனத்ததன தானந்தனதததன
தானநதனத்ததன—தனதானா.

ஆகச்சிறுகுடம்பை மீதிற்குடியிருந்த
வார்புட்குலமிருந்த வியலபா

மாவிக்குடலிருந்த நேசத்தையுமறிந்து
மாகத்தினைவிரும்பி யலவேே

மாகப்புயல்பொழிந்த நீரிர் பயிர்தழைந்த
வாறிற்கருணைதந்து துயாதீரா

மாறிபடுபிறவியெனற வேலைப்புணைநிகர்ந்த
வாசக்கமலமென்ற வடிதாராய்
மோகக்குறமடந்தைமார்பிற் களபகொங்கை
மோதப்புளகரும்பு புயவீரா
மோனத்துடனிருந்து ஞானக்கலைவிரும்பி
ஏமவாக்கருள்புரிந்த குமரேசா
நாககுலமெழுந்து பாயக்கதலிசம்பு
நாவற்கனிகிழிந்த ரசமோடி
நாடிப்புகழ்நிறைந்த சாலிதிரள்விளைந்த
நாகைப்பதியில்வந்த முருகோனே.

---

ரு. தானதன தானதான தானதன தானதான
தானதன தானதான—தனதான.

காமுகத்தோடுசேர்ந்து போமுகத்தோடுபொய்ந்து
காதுமட்டோடிநீண்ட விழியாலே
காமுகாக்காசைதூண்டி யாடகக்கூலிவேண்டு
காரியந்தாலும வாஞ்சை மிகவாகி
ஓசுருட்பாதியீந்து பூண்முலைக்கோடுதோய்ந்து
வேலையிற்போகம நீந்த வனுராகம்
மேவிளைத்தோகைதோன்ற ஏறவிட்டேணிவாங்கும்
வேசையாக்காசைபூண்டு மெலிவேனே
சூருடற்பாதிகீன்று பாதியைத்தோகைநீண்ட
சூழ்கொடிப்பாதியாண்ட வடிவேலா
சோலைமுத்தேசுபாங்கனே மலைப்பாவையீன்ற
தூயபொற ரேருள்முனைஞன்கு பெறுசேயா
நாரணித்தேவிகாய்ந்த வேளையெப்போதும்வாய்த்த
நான மறைத்தேவாகாஞ்சி புரிவாசா
நாதாசொற்பாலா வாய்ந்த பாடலைக்கூறுசேர்த்த
ஞைகையெப்போதும் வாழ்ந்த முருகோனே.

௬. தனனதனதானதன
தனனதனதானதன
தனன தன தான தன—தனதான.

அடிமோனை முறறெதுகை
தொடைபாவிகற்பமிசை
யசைசீரெழுததுமுறை முறையோடே

யமுதான சொற்சுவையு
மதிலேபொருட்சுவையு
மழகானபத்துமுறை வெளிறுதே

வடிவாயிலக்கணமு
மிகவேபழுக்கவயி
ரமுமேயடித்தகள மெனவேதான

மழைமாரியொப்பவெகு
தமிழ்மாரியைப்பொழியு
வரமேதரக் கருணை புரிவாயே

முடியோரகத்திறொடு
தலமாறிடதும்வட
மொழியாரணத் தருண கிரிநாதா

முதுபாவினைத்துமுன
தடியாருளததுமுழு
முதலாகமத்துமுறை வணிகேசா

விடுவானமுகட்டையள
விடுகோபுரச்சிகர
முயராலயத்தி லுறை வடிவேலா

உமையாள்வயிற்றில்முழு
மணியேதமிழ்ப்புகழு
முரகாபுரிக் கதிப முருகோனே.

எ. தனன தானன தனன தானன
தனன தானன தனன தானன
தனன தானன தனன தானன—தனதான.

அருமைதந்தருள் பெருமைதந்தருள்
புலமைதந்தருள் நிலைமைதந்தரு
ளழகுதந்தருள் குழவிதந்தரு ளதல்லாதே

யறிவுதந்தருள் பொறுமைதந்தரு
ளிளமைதந்தருள் வளமைதந்தரு
ளரசுதந்தருள் தவசுதந்தரு ளனுகூலா

ஒருமைதந்தருள் மகிமைதந்தரு
ளிருபுயங்களி லகில்வனைந்தவ
ருறவுதந்தரு ளுணர்வுதந்தரு ளெனவேதா

ளுரைசெயுந்தொறு மினியதொண்டர்க
ளகமகிழ்ந்திட முகமலர்ந்திட
வுதவுமுனசெயல விதரணங்களை யறியேனே

தருமசுந்தர வருணபங்கய
வதனமண்டல மிலகுகுண்டல
தருவெனுந்தொடையொடுகடம்பணி யிருதோளா

சமரபுங்கவ விசயசம்பிரம
வமரர்தனசிறை விடுமசஞ்சல
சரவணந்திகழ கருணையங்கட லெனுமவீரா

செருமுகந்தொறு மசுரர்தன்கிளை
மடியவென்றவ விமையவம்பிகை
சிவனிடம்பெறு கௌரிசுந்தரி தருபாலா

சிகரையம்பதி தணிகையம்பதி
மயிலையம்பதி கதிரையம்பதி
திருவிளங்கிய வுரகையம்பதி முருகோனே.

அ. தனன தன தான தன
தனன தன தானதன
தனன தன தானதன—தனதான.

கடலிற்கவிழ்த்த கலம்
விழலுக்கிறைத்த புனல்
கமரிற்கவிழ்த்துவிடு பாலாகும்

கனவிற்சுகித்த சுகம்
நதியிற்கரைத்த புளி
கவியிற்புதைத்த பொரு ளாநீடு

மடவிக்கெறித்த நில
விலைக்குறித்த கிளி
யழலிற்கதிர்க்கிரண மெனவேதா

நெறியைக்கழித்த திருகைப்
பதரைப்புடைத்த மெலி
யவலக்கருத்தடையும் வகைகாணேன்

விடலைத்திருக்குமர
வசுரப்படைத்தலைவர்
விபுதாக்குலத்தரென வருமாறி

வெளியிற்புறப்படவொ
விழியைச்சிமிட்டுகிற
விநயக்குறிப்பிடென வுணரவாகி

யுடலைப்பிளக்க வவா
குடலைச்சரித்தவர்க
ளுயிரைப்பறித்து வரு கதிர்வேலா

வுமைபெற்றெடுத்த சர
வணசிற்குணப் ப்ரபுட
வுரகைத்தலத்தில்வரு முருகோனே.

௯. தானதனதானதான தானதனதானதன
தானதனதானதன—தனதான.

வாசமலர்சூட்டுவோர்கள் வாள்விழிமைதீட்டுவோர்கள்
மார்பினமுலைகாட்டுவோர்க ளதனாலே
வாலிபரைவாட்டுவோர்கள் வேள்கலகமூட்டுவோர்கள்
வாசனைகள் கூட்டுவோர்க ளணிவார்க
ளாசையிதமூட்டுவோர்கள் வாளுகிரைநாட்டுவோர்க
ளானகுரலீட்டுவோர்க ளொருகோடி
யாகமிதியீட்டுவோர்கள் பரவமிகுகூடதிமாக
ளாசையறநீக்கியேயு னருள்தாராய
ராசாகுருமூர்த்திநாதா வானுலகோர்போற்றுபாதா
வேழுலகும்வாழத்துநீதா மயிலேறி
யேயுதவுகாகூதியாளா நாலுமறையேத்துசேயா
வேதமுறுமாற்றலார்க ளதிசூரா
நாசமறவீழ்த்துவேலா மாலவரையை யீர்த்தவேலா
நாகரிகம்வாய்த்தவேலா வடிவேலா
ஞானநிலைதோற்றமவேலா தேவர்சிறைமீட்டவேலா
நாகைவருகார்த்திகேயா முருகோனே.

---

௪௦. தனத்தானதானதன
தனதத்தானதானதன
தனதத்தானதானதன—தனதான.

அறபபாலைமேயுதவு
பொருட்பாலையேயுதவி
யருட்பாலிலேமனது நிலையாம
லருட்பார்வைவேணுமது
சருக்காணிபோலு மனை
யருக்காணியாகுமது தமவேணு

மறுப்பாடிலாததமி
ழுரைதராலுமோ வதனை
வளர்ப்பார்களாருமிலை யதனாலே
மடிப்பாகுதே கரும
மினிததேவரீரைவிட
வகைக்காரராரொருவர் பரமனீயே
குறப்பாவையார்மனது
கயப்பாவையாமனது
குறிப்பாகநாடு குரு பரசேவற
கொடிக்காரனேகனக
முடிக்காரனேவிபுதர்
குறிக்காரனேயசுரர் குலகாலா
கறுப்பானமால்மருக
சிவப்பானமேனியினில்
வெளுப்பானநீறுபுனை கதிர்வேலா
கழைக்காடுமேகதலி
வனக்காடுமேமருவு
கடைக்கானல்வேலிவரு முருகோனே.

---

௧௧. தானந்தனத்ததன தானந்தனத்ததன
தானந்தனத்ததன—தனதான.

வீணானவாழ்க்கையதி லேயூறுமூத்தையது
வேணாறுநாற்றமதி லுயிர்தானே
வீசாதகாற்றுநிலை காணாதவாழ்க்கையினின்
மேவாததோற்றமவை யறியேனே
சோணாடுகாக்கவரு காவேரியாற்றினிடை
தோயாதமார்க்கனென வதிபாவி
சோராமல்வாய்த்தமயின் மீதேறுகாக்ஷியொடு
தோராதமோக்ஷகெதி தரவேணும்

சேணுடாரபோற்றிசெய்து வாயாரவாழ்த்தநல
தேவாமுதூட்டினவன மருகோனே
சேயா பராக்கிரம விசாகா வைவேற்குமர
தேரேறுபாறகரனே நிகாதேவா
நீணாகமாத்தியலே மாறுததீர்த்தநதி
நீடாழிதோறறு மதி யிவைசூடி
நேராகவேறறிலவரு காரோணமூர்த்தியிடம
நீலாயதாக்ஷி தரு முருகோனே.

---

௪௨. தனத்ததந்தன தனதனதனதன
தனதததநதன தனதனதனதன
தனததத்நதன தனதனதனதன—தனதான.

அருமபசும்பொனசும்பு தசும்பொன
வளாநதெழுநது குவிநதுநெருங்கு மு
னைசுமபுசெமபொனவடஙகொள்புனைநதெதி ரிலேடாகி
யலஙகிாதஙகிருவம்புளகஙகளு
மிருநதகநதசுகநத கதம்பமு
மணிநதிணஙகுசுணங்குபொருநதிய குறமாதா
குருமபைவெனற தனஙகளழுந்திய
தடமபுயமபணிரெணடுமெவிளஙகு ம
குடம்புனைநத சிறநதெறிபுண்டர முகமாறுங
குளிாநதகண்பனிரெணடும்விளஙகிய
சிலமபுதண்டை சதங்கையுடன் குமு
குமென்றகொநதரவிநத பதங்களு மறவேனே
சுருமபனந்தமெதிாநது புறஞ்செல
வடந்தடாநது நடநதுநெருஙகுழை
தொடாநதுநின்று திரும்பியருங்குமிழ் மிசையோடி
துலங்குவம்புருவஙக ளெதிர்ந் தமு
துடனபொருந்தி விடஙகள்பயின்றெதிா
சுழனறுருண்டுசிவநதுகுடஙகையில் கெடுதாகிக

கருடபெனுஞ்சிலையம்புகளைநதையு
முனிநதரனகையில வநதுகுரஙக வி
கடமபுரிநது புரஙகளடஙகவு மெரியாலே,

கலஙகவெனறுலகஙகடழைநதிட
விரஙகுமனபு சுரநதுபொழிநதிடு
கருநதடஙகணமடநதை தருந்திரு முருகோனே.

---

௯. தானநதனததன தானநதனததன
தானநதனத்ததன—தனதான.

மாதாபிதாவினுட னாசானுமநீ துணைவா
மாமானுமநீ பரம சிவஞானி

வாழவானுமநீ விபுதாகோமானுமநீ கரிய
மாயோனுமநீ யுதவு கொடையாலே

தாதாவுமநீ மலர்விதாதாவுமநீ வினைகள
சாவானுமநீ யுடலி லுயிர்போலே

சாரவானுமநீமருவி யாளவானுமநீயுனது
தாளாணமைதானறிய வெளிதாமோ

ஆதாரபூதசதுர வேதா விநோத கரு
ணாகரதேவாபர குருநாதா

வாசானுமாகமறை வாசாமகோசர நி
ராகாரகிரணமுது தமிழேறு

காதாவிராலிமலை வேலா வலாரியுப
காராமுராரிதிரு மருகோனே

காலாயுதாசமர கோலாகலாவிமல
காரோணநாதாதரு முருகோனே.

௧௪. தனதனதத்தத தானன தன
தனதனதததத தானன தன
தனதனதததத தானனதன—தனதான.

மாதவிடாயைய தந்ததா லரை
மீதினிலேருத துணடவாயதனை
வாசனையோ தாக்கநதமாகிய குழியாகி
மாபுரையோடிச செம்புணுய மறை
நீளசலதாரைக கும்பியானதை
மானடியே யோபபெனற பாதக மொழிவேனோ

மோதிய மாபிற பந்தநோ பரு
வானதையானைக கொம்புபோலவு
மூடியபூளைக் கணைகளானதை யயிலபோலு
மூாலையே முதமெனறு வாயினி
லூழலையே கறகணடு போலவு
மோகவிடாயைக கொணடதீவினை யகலாதோ

நாதவிநோதப் பணடிதர் குற
மாதுதெயவானைக் கிசைகிதா சிவ
ஞானசொரூபச சுநதரா மலைக் கிழவோனே
நானமறைநீதிக் கந்தனே யுமை
யாளனுகூலக் கந்தனே யுனை
நாடியபேருக் கன்பனே யறுமுகவோனே

ஆதவன்வாயிற் றந்தமே விழ
மோதியகோபத் தெமபிரா னடி
யாாவினைபூளைப் பஞ்சுபோல் முடுகியதேவா
யாரணிகாமத தமபிகாபதி
காலனையே யுததண்டமா யடி
வாதிபுராணத் தம்பிரானருள் முருகோனே.

௰௫. தானாதனத்தன தானாதனத்தன
தானாதனத்தன—தனதான.

புறபுதப பாழுடலெடுத தெடுத தாவதென
புததாகைப பேனெனவு மெலிவேனே
பொறபெழுத்தாறுநித முசசரிப்பார்களிரு
பொறபதத்துளியுடல் புனைவேனே
அறபணாபபாடி யவாபக்கலிற் போயலைய
வதததனைக்காளல வெனனிடா தீரா
யககிரமககாலனுட னுததரியபாகளவ
ரசசமபபோதகல வருவாயே
கறபகக்காவிபுதர் சொர்க்கம்விட் டோடவிடு
கைசசிலைசசூாமுடுகு கதிர்வேலா
கடசெவிப்பூணழக ரட்டதிக்காடையினா
கைததலசசூலதரர் சிவயோக
குறபலககோலவிழி யற்புதத்தேவி யமு
தொததகறபூரமொழி யுமைபாக
குசசிதப்பீடமுறு சிததிரத்தேரிலவரு
முததமத தியாகர்தரு முருகோனே.

---

௰௬. தனதனதத்தத் தானன தன
தனதனதத்தத் தானன தன
தனதனதத்தத தானனதன—தனதான.

மொழிகள்சிணுஙகிப் பேசுவார் புழு
கொழுகநிரமபப் பூசுவார மயிர
முடியை யடங்கக் கோதுவார் மலர்மாலை
முருகுகொழுநதைச சூடுவார் மிட
றிசையை முழங்கிப்பாடுவார் பகல்
முழுது முடம்பைப பேணுவா ரிளைஞர்களமீதே

விழியிணை யம்பைப் போலவோ ரிரு
முலைகள் குலுங்கக் கூடவோ நிதி
மிகவும் விரும்பித் தேடவோர் கணி — கையாமித்து

விரகமெனும் பிதற்றேறியே விழு
நரகி லழுந்திப் போயவிடா வகை
விரைசெய்சதங்கைப் பாத தாமரை — தரவேணும்

வழுதியுடம்பிற் கூனும் நீடிய
சுரமுமடங்கிப போகவே பொடி
யணியுமருந்திற நீரவே யருள் — புரிபோதில

வழுவுசமணகெட் டோடவே
கழுவிலுடன்பட் டேறவே யவர்
மரபுநெங்கச் சீறு தேசிக , — வடிவோனே

அழிவில்குரங்கைச் சேனையா யெதி
நிறுவி யிலங்கைப் பாவிராவண
னவனைமழுங்கச சாடினோன் மகிழ — மருகோனே

அரியகடமபைப பூணுமார்பக
குருபரசெநதிற் றேவநாயக
வழக விடங்கத் தியாகனா தரு — முருகோனே.

---

௧௭. தானதானன தானனதனன
தானதானன தானனதனன
தானதானன தானனதனன — தனதான.

ஆதிநாள்வினை தீராதோ மிடி
தீரநாளினம வாராதோ வறி
யாமையா மதி போகாதோ — மதுரிதமாக

வாசுபாடவ தோராதோ மொழி
வாய்மைகாதினி லேறாதோ வடி
யார்கள்போ லெனை நாடாதோ — திருவுளமேதோ

நீதிலாநெறி சேராதோ வெரு
காலனார்படை தோராதோ பல
சேதியானது பாராதோ வடி வழகான

சோலைதானினி நேராதோ சிவ
ஞானபோதனை தாராதோ வடி
சேரவேயருள் கூராதோ செய லறியேனே

பூதசேனைகள் கோடாகோடிகள்
தானைகாவலர் மோடாமோடிகள்
போதவே புடை சூழசேனாபதி யெனும்வீரா

பூரணாகும ரேசா கேகய
வாகனாகுற மானார் மோகன
பூஷணாகுல தேவாதேவர்கள் பெருமாளே

காதியேபுர மாறுய நீறெழ
வீசுமூரலினாலே போர்புரி
காரணாதியா காயாரோகணர் தருபாலா

காமனார்படைவீடே நேர்பொழில
மாடமாளிகை தானே சூழ்வுறு
கானலவேலியினவாழ்வே யோக முருகோனே.

---

கஅ. தனதானதானதன
தனதானதானதன
தனதானதானதன—தனதான.

மகராஜராவர் தன
பதிராஜராவர சிலை
மதராஜராவர புவிமுழுதாளு

மனுராஜராவா கன
துரைராஜராவர் தமிழ
வல்ராஜராவர்சமர் பெறவேகா

முகராஜராவர் மத
கரிராஜராவா மறை
முனிராஜராவ ருரைபிசகாத
மொழிராஜராவ ரிரு
விழிராஜ பார்வையிலுன
முதுராஜபார்வை பெறி னரிதாமோ
நகராஜனா மருக
புரநாசகோப திரு
நடராஜனா கனக சபைராஜர்
நதிராஜவேணியினர்
தவராஜனே தவள
நரராஜசீயமுளரி யினராஜா
செகராஜசாலி சுக
மகராஜராஜா தச
ரதராஜாநீளகமல முனிராஜா
தினராஜ பானுவொடு
பணிராஜா பூசைபுரி
சிவராஜதானி வரு முருகோனே.

---

௧௬. தனதனதததத தனதனதத்தத்
தனதனதததத தனதனதத்தத்
தனதனதததத தனதனதததத்—தனதான.

தோறறசைமூளை யிரததமெலா மொரு
காததிரமான துருததியிலே வரு
சூததிரதாரி யெனப்புகுவாய் புகு மியல்பாலே
சூடசுமமாக வசைத்திடுவாய வெகு
மூசசையுலாவி வரசசொலுவாய் மிளிர
தோறறமுமாகி யொடுக்கமு மாகுவை யதலலாதே

யாதுமம வேறு பிரித்திடவோ யதில்
வேறுமைபோல வெளித்திடவோய் பிணை
வாகனைகயைநாற வெடுத்தெறிவா யிது தொழிலாக

வாகினைகோலி நடத்திடவோய் புழு
வேட்டுவனூடி யெடுத்ததுபோல வினை
யாறபிறவாதுச துடடயவீ டினி யருளவாயே

ஏறறினிவேலறு சிவப்பெருமா ளறு
சாதகிரநாலு மறைப்பெருமாள மழு
வேறறிடுசூல தரபபெருமா ளழ குடனும்

மேறகயிலாய வரைப்பெருமாள வீரா
யாசதியினீழ லிடபபெருமா ளுல
கேதியதேவா துரைபபெருமாள பகிரதிவீறு

கீறுநிலாமகுடப்பெருமாள திரு
நீறரொளிவீசு நுதறபெருமாள தமிழ்
கேடடருள்கூரும வகைபபெருமாள் புர மதனுலே

கீாதிகொள்மூரல விழிபபெருமா ளிரு
நாறறிசையாடை யுடைப்பெருமா ளுயா
கேததிராராஜ புரப்பெருமா ளருள முருகோனே.

---

௨௰. தனதத தனதத் தனதத தனதத்
தனதத தனதத் தனதத தனதத
தனதத தனதத தனதத தனதத—தனதான.

பொறுமைத்திறமற் றறமற்றருளற றுணாவைச
செவியிற பறியபபுகவிட டறிவுக்
கிடமற றிருளிற புகுவேனே

புடவிக் குடிமைக் கடிமைப படுமைக்
கடமைக கடிபட டெழலத தலையிற்
பொறியெப்படியப படிகட்டளையிட் டிடலாலே

பிறவிக்கடலிற புணையைததலையிற
சிலையைசசரணிற றலைகைக் கொளுவிப
பிடிபட டடிபட் டுயரபபணியத தடுமாறி

பிணியிற்றளாவுற றுருமிப் பகாசொற
குழறிக் கழறித தடியிற றிரியப்
பலனற்றவனுக் கினிநற கதியைத தரவேணும

கறுவிச்சுரசத துருவச சமரிற்
கழுகுக்கிரையிட் டமரக்குழுவைக்
கடுகிக்கொடுமைச சிறைவிட டிசைபெற றிடுவோனே

கமலததயனைக குடிலைப்பொருளைக
குறைசெப்பென வபபொழுதிற குழறக்
கடினததொடுகுட டியகைத்தலவிற பனவேளே

சிறுகட்கரடத திரிகட் டிவளக்
கவளப்பவளத தவளசசிவனுக
கொருபுத்திரனுக கருமைத துணைவோனே

திகழ்பொறபழனிக கிரியிற றணிகைக
கிரியிறகதிரைப பதியிறபரவைத
திரைசுற றுரகைப் பதியிற குமரப் பெருமாளே.

---

உக. தானதனதான தானதனதான
தானதனதான—தனதான.

சாணுணபணடி தூராதகுமபி
தானேவெதுமபு பசியாலே

தாளாண்மைகுன்றி வாளாவிருந்து
தாதாவுமின்றி யலைவேனோ

வாணாளுமவிண்டு போனாலுடம்பை
யாருசமெனபள பெறுதாயு

மானாலுமிநதிர மாஞாலவிஞசை
யாகாதுசெமபொ னடிதாராய்

தானுமென்பா னானுவிதழ்க்க
டானெதெரிந்து முறையோடே
சாலோகமிஞ்சி சாமீபமிஞ்சு
சாரூபமந்த மருளவோனே
காணுதுகண்ட தேபோல்மகிழ்ந்து
காலாலநடந்து மொழிதூதா
காரோணாதந்த பாலாசிவந்த
காயாமெய்கண்ட முருகோனே.

---

௨௨ தததனதத்தன தததன தத்தன தததன
தததனதத்தன தததன•தததன தததன
தததனதத்தன தததன தத்தன தசதன—தனதான.

அஷ்டமத்தி லுறுஞ்சனி கேதுவும ஜன்மத்தினில்
வக்கிரித்து வருமபுத னுதய னைனறினில
அத்தமித்த புகரொடுகூடினும வெணசுட ரிருநாலாம்

அத்தலத்தில மருவினும ராஜன்மகிழ்ந தொரு
பத்திடத்தி லுறையினும் நாலினில வெமபணி
யச்சமுற்ற குசனொடுகூடினு மெனசெயவ ரவராலே

தொட்டசைப்ப தரிதரிதா றெனு மந்திர
முச்சரிக்கி னிடாகெடு வேதனை வெம்பிணி
சொற்பனத்தைநிகாபடவோடி மறைந்திடு மதல்லாதே

சொர்க்கமிக்க பதவிகளோ வெதிர வந்திடு
மப்படிக்கு னருள்பெறவேணு மெனுமபடி [ாவாய
சொற்புகழ்ச்சி பெருந்தமிழ்பாடவிருமபியுன னருளகூ

மட்டுமொய்த்த களபமும நீபமும் வஞ்சியு
வெட்சிமிக்க தொடையலும வாகை கரந்தையு
முற்புயத்தி லணிகரு ணாகர சுந்தர வடிவோனே

உச்சிரகலை மசபதியாகிய விந்திர
ளிசைவைத்த மணமருகா குற மங்கைதன
வட்டமிட்ட குவிமுலைபாய வுழுந்திய புயவீரா

கட்டினிறகு மதசரி சேனைகள் வெம்பரி
கொட்டமிட்டு வருமசு ரேசனை வென்றிடு
கைத்தலத்தி லமரயி லாயுதபுங்கவ குமரேசா

கற்பகத்தை யுதவிய தாதையர் சங்கரா
கீர்த்தமிட்ட சபையினா நாகை விளங்கிய
கட்டியப்பரமீந்த கடேசுரா தநதருள் முருகோனே.

---

௨௯. தானதன தானதன தானதனதானதன.
தானதன தானதன—தனதான.

முருகுவண்டாட நறை விரிசடம்பாட வறு
முகமலர்ந்தாட நகை நிலவாட
மொழிகனிந்தாட வருள் விழிசுரந்தாட மணி
முடியசைந்தாட வணி புனைதோளா

வளைதிரண்டாட விடு குழைபுரண்டாட வரை
வடமசைந்தாட வடி யிணையான
மலர்சிறந்தாட வதி லணிசிலம்பாட வொரு
மயிலவிரைந்தாட வெதிர் வரவேணும்

கிரியிலங்காபுரியில நிருதர்சண்டாளருட
சிரசுபந்தாடு மரி மருகோனே
சிவனிடமபாதிபெறு கவுரிசந்தானகுல
திலகசங்கிராம சிவ குருநாதா

அருணசிங்காரஜெய விருதலங்காரபொரு
மசுராசங்கார திற லபிராமா
மமாகொண்டாடவரு விமலகங்காளரெனு
மமரநந்தீசா தரு முருகோனே.

---

உச தான தானன தானன தன
தான தானன தானன தன
தான தானன தானன தன—தனதான.

பூவுடன்படும் நாரபோலே நலப்
பாலுடனபடு நீரபோலே யணி
பூணுடனபடு நூலபோலே பதா மிகுசாலி
போலுடன்படு நோபோலே யடி
யாருடனபடு வேறே நீயருள
போதமும்புரி வாயோ யாதென வழியேனே

யாவியொனறுடல் கோடி கோடி
யநேகமுண்டது தானேநீசெய்வ
தாகிலுன்கரம் நோவாதோ மல பரிபாக

மானசந்தியும வாராதோ வினை
யோரிரண டிணையாகாதோ வெனை
யாளவுந்திறம போதாதோ வினி முடியாதோ

சேவலங்கொடி யானே யோக
மாவினனகுடியானே வானுள
தேவாதமபெருமானே தேசிக வடிவோனே

சேயகந்த சுவாமியான
படீர குஙகுமமாபா ஞான வி
சேட மந்திரசொரூபா யாமளீ தருபாலா

நாவிலஙுகையில் வேலாலே யினி
தாய்வரைந்திடு போதா தேடிய
நாவலனறுகிபேசா வூமைய னலவோதான

நாணிலம்புகழ சோணாடா புல
வோநெருங்கிய சேணாடாதிரு
நாகையம்பதி வாழ்வே மாமயில் முருகோனே.

உ௫. தானந்தனதத்தன தானந்தனத்ததன
தானந்தனதத்தன — தனதான.

தலைமீதிலொடுசேரு குவாவாலரோடெனது
தலையோடு வேமளவு மகலாதே
தயவோடு சேர்வனென மிகவாணைகூறியவர்
தமைமேவியே நிதி கை வசமாக
வலைவீசியேபிறகு தலையோடு தீயிலிடும
மதிகூாமை வேசியர்க ளுறவாமோ
மயிலவாகனு முடிவில்விடுகோலபாச முறில
மறைநாள நூலெனவு மருளபராய
அலையாழியேழுமலா பொழிலாதியேழுமுடி
யசலாதி யேழு மணி முகிலேழு
தலமாதியேழு முயருலகாதி யேழுநிலை
யலையாமலாலம நுகா கனிவாயா
கலைமாதுகேள்வனிசர் சதாவேத ராஜமுனி
சனமானபூஜை புரி யிருபாதா
கடலநாகைவாழவரு சிவகாமி பாகமுறு
கயிலாயநாதா தரு முருகோனே.

---

உ௬. தனனதனதனனதன
தனனதனதனனதன
தனனதனதனனதன — தனதான.

இளவட்டமாய் வயது
வொடலொட்டையாகி விடு
வெழிலகெட்டு பேனிமுதிா கிழமாகி
யெழுபுத்தி யோசனையு
மழுமட்டையாய் விழிக
ளெதிரிட்ட பேருருவ மறியாதே

தளாவட்டமா யறிவு
முழுநட்டமா யுணர்வு
சலவட்டமாய் மொழிகள் — தடுமாறி
தலைநட்டுவீழ் துயிலி
னெடுபட்டு நூலிழைகள்
தலைகெட்டதாமெனவு — மலைவேனோ

களபப படீரமணி
புளகப் படாமுலைகள்
கனமெத்தமாகியிடை — நலியான
கடினத்தை வாரகுழையி
னெடுசெப்ப வோடிவரு
கருணைப்பிரதாபவிழி — மகமாயி

நளினத திவாணிரதி
சசிநிதத மேபரவு
நடமிட்ட பாதவடி — வுடையாளாம்
நவசித்திர ரூபமிகு
சிவசத்தி பாலமருவு
நிவுதத லேசா தரு — முருகோனே.

---

௨௭ தானனதனன தானனதனன
தானனதனன—தனதான.

ஒருபொருளா யதி லிருவகையா யதி
லுருவமுமா யதி — லருவாகி
யுணர்வரிதா யதி லறிவுளதா யதி
லுடல்பொருளாவி கொ — ளுபதேசா

குருவடிவா யெனை யடிமையதா யுள
குலதெய்வ மாயறு — முகமாகி
குருபரனாகிய கருணைமனோலய
குணவற பூதியை — யடைவேனோ

தருமதயாபர விபுதாஜெனுதர •
சகலகுணகர வுபகாரா,
சம்ரபுயாசல திமரதிவாகர
சருவவியாபக குருநாதா

அருமறைவேதனு மணிமுடிமாயனு
மடிமுடிதேடிய மகதேவ
ரரகரயீசர சிவசிவ நாகையி
லழகியனூர் தரு முருகோனே.

---

௨அ தததனத தனதத தநத
தததனத தனதத தநத
தததனத தனதத தநத—தனதான.

வட்டமிட டடிக கனதது
வெறபெனப் புடைத தெதிரதது
மததகப பொருபபையொதத முலைமீதே
வசசிரப பதககமிட்டு
நிததிலக கடுககணிட்டு
வட்டமிட்ட சுட்டிகட்டி யழகான
கடடிலமெததை யிறபடுதது
மடடறப பொருடபறிதது
கட்குடிப் பரதையாககு மயலாகிக
கபபலைககட்ற கவிழநத
தொதததவறப னுககுமிகக
கட்டளைப் பிரசிததிமுததி தரவேணும
கொடடமிட்ட சததுருககள
கொக்கரித திரததசததி
கொப்பளிகக வெட்டியிட்ட சமாவேலா
குக்குடககொடிப பிரவுதத
வறபுதக்குறததி செப்பு
கொசசையிற பிரியததைவைதத மணவாளா

அட்டதிக் குடுத்த கர்த்தா.

தகசனக கறுத்தமத்த
ரருக்கனைப் பலத்தகாத்து மதவேளை
யககமிட்டெரித்த நித்தர்
வெற்பிடத் திருக்கைபெற்ற
வத்தாசட்டை யப்பாபெற்ற முருகோனே.

---

உகூ. தனனதனதானதன
தனனதனதானதன
தனனதனதானதன—தனதான.

ஆலக்காமா விஜய
வாகைத்தாமா வெனவு
தாரச்சோமா நிதியி லளகேசா

வாண்மைத்திரா வதிக
வாள்விறபோரார் சமரி
லாடறசூரா வெனவு மறியாதே

ஓலப்பாழா யெழுது
பாடறகேளாத முனை
மோடிபபோய மூலையினில் மறைவாகும

லோபப்பா ழானருட
பேரைபபாடாம லவ
ருரைப்பாடாம லரு டரவேனு

மாலைப்போதா யுலகை
மூடசசீராழி தனை
வானத்தேராளி மிசை விடுமாயன

மாயபபோராக வொரு
பேடிக்காளாகி யவனை
வாசித்தேருரு மகி மருகோனே

வேலைசூர்மாள விளை
யாடியபோர வாகைப்புனை
வேலபபா தேவர்சிறை விடுமெ நாதா
வேரிபபூவா லமரா
பூசித தாராதனைசெய
மேலைக காரோணாதரு முருகோனே.

---

௩௰ தானதானதானதான
தானதானதானதான
தானதானதானதான—தனதான.

காலைமாலை நீரின்மூழ்கு
நானபான நேதிபூசை
காதலகூடா தியானமோன மிசையான
காதை யோதனுமாய
விடாதுபேசல கேள்வியான
காமாகோயின மாடுசூழ லழகான

வாலபானு கோடிகோடி
யேகராசி ரூபமோடு
மாசிலாத பீடமீது கொலுவாகி
வாழும்ராஜ தானியோக
நாகரீக பாதசேவை
மாறிலாது காணநாளு மருள்வாயே

ஆலகால பானனா
கபாலசூல பாணிநாக
மாறுசோம னரிமாலை யணிவேணி
யாதிர்த்தி சோதிபேதி
டாததேவர் மூவரோது
மாசிலாத பாடலசூடு மகேசா

நாலுவேத நாதகீத
ராசைநாலு தூசர்சா
நாலுதோளு நாலுவாயு முனாதாதை
நாரிபாகா காலகாலா
நாகராஜா பூசையான
நாகநாத னாகுமார முருகோனே

ருக. தனதனதநத தனதனதந்த
தனதனதநத—தனதான.

இடிபபாராபடலகொடு பிடிப்பாருறுபுலி
யெனபபாயுமவித மதருலே
யிளைதசேனுடலபர தவிதசேவரகர
வினிததா னிதுபட முடியாதே
மிடிபபாதகவிரு ளறுதசே யிரணிய
விளககாகிய வொளி பெறவேதான
விருப்பாயகமகிழ மலாததாமரையெனும
விழிபபாரவையி னருள புரிவாயே
கொடிக்கேகிகரிடை தனைதாலயாவுறு
குறககோகில மயில மணவாளா
கொடிசசேவலையுள சமாததா லசுராகள
குடிககே மறவியை நிகாவேலா
அடிக்காயிரகிரி படிககாசுதவியு
மருட்பாவலாதமிழ் புனை சேக
ரழறபோல்விரிசடை முடிதசோ குரகைபி
லகததிசுரா தரு முருகோனே

நட. தானதனதானதன தானதனதானதன
தானதனதானதன—தனதான.

ஐநதொழிலறிநதுபுரி யையகடவுடஙகநிலை
யஞசுவகை மநதிரமு மறியேனே

மையமபொழுதுநினைறிலை யைஙகுராவனெனபதிலை
யைந்திணைகட்நத நிலை மகிழ்நத

மைநதையுமறிநததிலை யைநதறிவுவநததிலை
யைம்புலனை வென்றதிலை யதனாலே

யைஙகணையொழிந்ததிலை யைநதுநதிகணடதிலை
யைம்பதமு முயநதிட நினருள தாரா

யநதரிதுரநதரி புரநதரிநிரநதரி
யரம்பையா வணஙகவரு மிருதாளி

யமபிகைசுமஙகலி யிளமபிடிபசுஙகொடி
யருநதவமிகுநத வுமை தருபாலா

சுநதரிரணடுவிசை சநதுவிடுகினற விறை
துமபையணி செஞசடிலா முனிவோாகள

தொணடாகளுமிநதிரரு மணடருவணஙகவரு
சுநதரவிடஙகாதரு முருகோனே.

---

௬௬. இநதப பாடலுள்ள ஏடு செவவையாக விளங காதிருபபதால இது பிரசுரிக்காது விடப்பட்டது

---

௬௭ தனதனன தானதான
தனதனன தானதான
தனதனன தானதான—தனதான

அடியைததாரா யெனது
மிடியைபபாராய் துயர
மதனைததீராய பொதிய முனிநேரா

யறிவைததாரா யடிய
ருகிற்சேராய மனதி
லருளைககூராய் மயிலின மிசைவாரா

யடிமைபபேறு யுருகு
குடிமைததாராய வினையேன
